**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 1069 /2022**

## Prosecution Witness : 1

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: டேனியல்** | **Caste** | **:** |
| **Father's Name** | **: செல்வராஜ்** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Religion** | **:** |
| **Taluk** | **:** | **Age** | **:** |
| | | **Dated** | **:** |

**02.04.2024**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 1 திரு.டேனியல் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**2 ம் எதிரி ஆஜர் / 1 ம் எதிரி ஆஜர்இல்லை U/S 317 crpc petition filed and allowed.**

1. நான் நிலக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். டெய்லர் வேலை செய்து வருகிறேன். 09.05.2021ம் தேதி நானும், எனது மனைவி கிரிஜாவும் எனது மனைவியுடன் வேலை செய்யும் சுதா என்பவரது அம்மாவை பார்ப்பதற்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு வந்திருந்தோம். சுதாவின் அம்மாவை பார்த்துவிட்டு, 7 மணிக்கு கிழம்பினோம் 8–8.15 மணியிருக்கும் தோமையார்புரம் அருகே நானும், எனது மனைவியும் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது, அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் ஹெல்மெட் அணிந்து இருசக்கர வாகனத்தில் வந்து எனது மனைவியின் தாலிசரடை அத்துக்கொண்டு சென்றுவிட்டார்கள். அதன் எடை 3 ½ பவுன் இருக்கும். அவர்களை விரட்டி சென்றோம் பிடிக்க முடியவில்லை. காவல்நிலையத்தில் இது சம்மந்தமாக நடவடிக்கை புகார் கொடுத்தோம். என்னிடம்

காட்டப்படும்புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். புகார் அ.த.சா.ஆ.1 ஆகும். பின்பு நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டோம். நீதிமன்றத்தில் தங்க கட்டியாக பெற்றுக்கொண்டோம். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள தங்க கட்டியை தான் நான் நீதிமன்றத்தில் பெற்றுக்கொண்டேன். அந்த தங்க கட்டியின் புகைப்படம், குறுந்தகடு அ.த.சா.ஆ.2 ஆகும்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரணையிலும் நான் தற்போது முதல்விசாரணையில் சொல்லியுள்ள விபரங்களைத்தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகார் மனுவில் எந்த தேதியில் புகார் கொடுத்தேன் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

நான் கொடுத்த புகாரில் ஹெல்மெட் அணிந்தவர்கள் எப்படி இருந்தார்கள் என்று அடையாளம் எதுவும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். என்ன வகையான ஹெல்மெட் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

V PRIYA
Digitally signed by V PRIYA
Date: 2024.04.06 18:39:57 +0530

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 1069 /2022**

## Prosecution Witness : 2

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: கிரிஜா** | **Caste** | : |
| **Father's Name** | **: டேனியல்** | **Calling** | : |
| **Village** | **:** | **Religion** | : |
| **Taluk** | **:** | **Age** | : |
| | | **Dated** | : |

**02.04.2024**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–2 திருமதி.கிரிஜா ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**2ம் எதிரி ஆஜர் / 1ம் எதிரி ஆஜர்இல்லை U/S 317 crpc petition filed and allowed.**

1. நான் நிலக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். மெட்ரோ மார்க்கெட்டில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர் ஆவார்.

2. 08.04.2021ம் தேதி நானும், எனது கணவரும் என்னுடன் வேலை செய்யும் சுதா என்பவரது அம்மாவை பார்ப்பதற்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனை வந்திருந்தோம். சுதாவின் அம்மாவை பார்த்துவிட்டு நானும், எனது கணவரும் இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தபோது சவரியார்பாளையத்தில் வைத்து இருசக்கர வாகனத்தில் ஹெல்மெட் அணிந்து வந்த இரண்டு நபர்கள் எனது செயினை பறித்துவிட்டார்கள். அவர்களை விரட்டிசென்றோம் பிடிக்க முடியவில்லை. இதுசம்மந்தமாக நடவடிக்கை எடுக்க போலீசில் புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள சாட்சி கையொப்பம்

என்னுடையதுதான். புகாரில் உள்ள சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ.3 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் தற்போது முதல்விசாரணையில் சொல்லியுள்ள விபரங்களைத்தான் போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த புகாரில் தேதி எதுவும் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் எந்த ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எதிரிக்கும், இந்த சம்பவத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

V PRIYA

Digitally signed by V PRIYA
Date: 2024.04.06 18:40:04 +0530

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 1069 /2022**

## Prosecution Witness : 3

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: சுதா** | **Caste** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |
| | | **Dated** | : |

**02.04.2024**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 3 திருமதி.சுதா ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 3 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**2 ம் எதிரி ஆஜர் / 1 ம் எதிரி ஆஜர்இல்லை U/S 317 crpc petition filed and allowed.**

1. நான் நிலக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். மெட்ரோ மார்க்கெட்டில் வேலை செய்து வருகிறேன். அ.சா.2 கிரிஜா என்னுடன் வேலை செய்து வருகிறார்.

2. எனது அம்மாவை திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் அனுமதித்திருந்தோம் அவரை பார்ப்பதற்காக அ.சா.1,2 08.05.2021 ம் தேதி வந்திருந்தார்கள். எனது அம்மாவை பார்த்துவிட்டு வீட்டிற்கு சென்றவர்கள் எனக்கு போன் செய்து தோமையார்புரம் பக்கத்தில் இருச்ககர வாகனத்தில் சென்றபோது அ.சா.2 ன் செயினை அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் அத்துவிட்டதாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

V PRIYA
Digitally signed by V PRIYA
Date: 2024.04.06 18:40:10 +0530

Judicial Magistrate No.I
Dindigul.